ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1774/11 - 2012 සැප්තැම්බර් මස 05 වැනි බදාදා - 2012.09.05

*1774/11 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்**

57 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*மின்வலு, சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இலங்கை மின்சார சபைக்குத் தேவைப்படுவதும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான காணியின் உத்தேசிக்கப்பட்டுள்ள சுவீகரிப்பிற்கு இவ்வாணையின் மூலம் அங்கீகாரம் வழங்குகிறேன்.*

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
மின்வலு , சக்தி அமைச்சர்.

கொழும்பு,
*2012, ஓகத்து 24.*

**அட்டவணை**

இலங்கைத் தீவின் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உடபனை கோரளை சிறு பிரிவிலுள்ள கிராமத்தில், இல. 468B துனுக்கேதெனிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் மெதகும்புர தோட்டத்தின் சவுத் பிரிவில் அமைந்துள்ளதும் 0.0119 ஹெக்டயார் பரப்பளவைக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். பிரசன்ன அல்விஸ் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2012, மே 30 ஆந் திகதி கொண்ட யுகேஎச்பி/ஏஆர்பி/023 ஆம் இலக்கமுடைய நில அளவைப் படத்தில் காட்டப்பட்டுள்ளதும் துண்டு இலக்கம் 1 ஐ கொண்டுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான காணி:-

காணித்துண்டு இல. 1- மெதகும்புர தோட்டம் ; விஸ்தீரணம் : 0.0119 ஹெக்டயார்.

வடக்கு : வீதி ;
கிழக்கு : அதே காணியின் மீதிப்பகுதி ;
தெற்கு : அதே காணியின் மீதிப்பகுதி ;
மேற்கு : அதே காணியின் மீதிப்பகுதி.

*உரிமை கோருபவர்: வரையறுக்கப்பட்ட அல்பிட்டிய பெருந்தோட்டம்.*

9- 565

## *1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்*

57 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*மின்வலு, சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இலங்கை மின்சார சபைக்குத் தேவைப்படுவதும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான காணியின் உத்தேசிக்கப்பட்டுள்ள சுவீகரிப்பிற்கு இவ்வாணையின் மூலம் அங்கீகாரம் வழங்குகிறேன்.*

*பாட்டலி சம்பிக்க ரணவக்க,*
*மின்வலு , சக்தி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2012, ஓகத்து 24.*

### *அட்டவணை*

*இலங்கைத் தீவின் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள திம்புலை கோரளை சிறு பிரிவிலுள்ள ஹொலிரூட் கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹொலிரூட் தோட்டத்தில் அமைந்துள்ளதும் 2.4712 ஹெக்டயார் மொத்த பரப்பளவைக் கொண்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். பிரசன்ன அல்விஸ் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 2006, ஓகத்து 22 ஆந் திகதி கொண்ட யுகேஎச்பி/ஏஆர்பி/022 ஆம் இலக்கமுடைய நில அளவைப் படத்தில் காட்டப்பட்டுள்ளதும் துண்டு இலக்கம் 1, 2 ஐ கொண்டுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதுமான காணி:-*

*காணித்துண்டு இல. 1- ஹொலிரூட் தோட்டம் ; விஸ்தீரணம் : 2.2980 ஹெக்டயார்.*

வடக்கு : *அதே காணியின் மீதிப் பகுதி, ஹொலிரூட் தோட்டம், வரையறுக்கப்பட்ட தலவாக்கலை பெருந்தோட்டம் ;*
கிழக்கு : *பாதை, ஓ. சி. விக்ரமசிங்க, எம். ஐ. உம்மா, டி. ஜே. சி. எஸ். ஓபாத மற்றும் டப்ளிவ். எம். சி. மார்டன் சிங்கோ ஆகியோரால் உரிமைகோரப்படும் இரத்னீலகலை காணி, பாதை, எஸ்.எம்.ஜரின் சமரக்கோன் மற்றும் பி. எச். விபுலாநந்த ஆகியோரால் உரிமைகோரப்படும் இரத்னீலகலை காணி ;*
தெற்கு : *ஏ. டி. அமரதாச, டொனா டுல்சி, ஜி. எச். மானல் காந்தி மற்றும் ஜயலத் குடாகம ஆகியோரால் உரிமைகோரப்படும் இரத்னீலகலை காணி, அதே காணியின் மீதிப் பகுதி, ஹொலிரூட் தோட்டம், வரையறுக்கப்பட்ட தலவாக்கலை பெருந்தோட்டம்;*
மேற்கு : *அதே காணியின் மீதிப்பகுதி, ஹொலிரூட் தோட்டம், வரையறுக்கப்பட்ட தலவாக்கலை பெருந்தோட்டம்.*

*உரிமை கோருபவர்: வரையறுக்கப்பட்ட தலவாக்கலை பெருந்தோட்டம்.*

*காணித்துண்டு இல. 2- ஹொலிரூட் தோட்டம் ; விஸ்தீரணம் : 0.1732 ஹெக்டயார்.*

வடக்கு : *பாதை, நிசந்த சில்வா மற்றும் லக்சி பிரியங்கா ஆகியோரால் உரிமைகோரப்படும் இரத்னீலகலை காணி ;*
கிழக்கு : *லக்சி பிரியங்கா மற்றும் சமன் கீர்த்தி ஆகியோரால் உரிமைகோரப்படும் இரத்னீலகலை காணி ;*
தெற்கு : *பியதிஸ்ஸ மாயாகடுவ, லசந்த உதயகுமார மற்றும் ஜயதிஸ்ஸ பத்திரண ஆகியோரால் உரிமைகோரப்படும் இரத்னீலகலை காணி ;*
மேற்கு : *பாதை.*

*உரிமை கோருபவர்: வரையறுக்கப்பட்ட தலவாக்கலை பெருந்தோட்டம்.*

*9-566*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.